சுருக்கம்

பணியமைப்பு - நீர்வளத்துறை - தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி - கருணை அடிப்படையில் பணி நியமனம் – திருமதி.கா.உமா, த/பெ.காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.உ.காளியப்பன் - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது - விதிகளைத் தளர்த்தி பணிவரன் முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நீர்வளத் (பி1) துறை

அரசாணை (3ப) எண். 71

நாள் :03.11.2022
சுபகிருது,ஐப்பசி 17
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 23.01.2020.
2. தலைமைப்பொறியாளர், நீர்வளத்துறை, மதுரை மண்டலம், மதுரை அவர்களின் கடிதம் எண்.அ2/2699/2020, நாள் 20.04.2020, 26.09.2020, 14.12.2020, 25.02.2021 மற்றும் 28.01.2022.

ஆணை:-

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை, மதுரை மண்டலம், மதுரை அவர்கள் சிவகங்கை, கீழ்வைகை வடிநில வட்டத்தின் கட்டுப்பாட்டிலிருந்த சிவகங்கை சிறப்பு திட்ட கோட்டம், நீர்வள ஆதாரத்துறை அலுவலகத்தில் இரவுக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு உ.காளியப்பன் கடந்த 06.08.2010 அன்று காலமானதைத் தொடர்ந்து, அவரது மனைவி திருமதி கா.முத்துமணி என்பவர் தமது வாரிசுதாரர்/ இரண்டாவது மகள் திருமதி கா.உமா என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி வழங்க கேட்டுக் கொண்டதற்கிணங்க, முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களால் திருமதி கா.உமா என்பவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் மதுரை, பெரியாறு வைகை வடிநில வட்டத்தின் கீழ் இயங்கும் மதுரை, சுரங்கவியல் மற்றும் கண்காணிப்பு கோட்ட அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மதுரை, சுரங்கவியல் மற்றும் கண்காணிப்பு உபகோட்ட அலுவலகத்தில் 30.08.2018 முற்பகல் முதல் பணிமேற்கொண்டு வருகிறார் என்றும், பத்தாம் வகுப்பு தேர்வில் ஏப்ரல் 2004-இல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், தனியரின் பிறந்த தேதி 27.05.1989 என்றும் தெரிவித்து, தனியரின் பணியினை வரன்முறை செய்வதற்குத் தேவையான அனைத்து அசல் சான்றிதழ்கள் / சான்றாவணங்களை அனுப்பி வைத்து, தனியரின் பணியினை அவர் அப்பணியில் சேர்ந்த நாளான 30.08.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை, மதுரை மண்டலம், மதுரை அவர்களின் கருத்துருவினை மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி அரசு நன்கு கவர்ந்தாய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், நீர்வளத்துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்வதற்கு முன்னரே திருமதி கா.உமா (த/பெ.காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு உ.காளியப்பன்) என்பவருக்கு திருமணமாகியுள்ளதால், தனியரின் பணியினை அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 30.08.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்யவும் மற்றும் பணியில் சேர்ந்த நாளிலிருந்து முன்தேதியிட்டு பணப்பயன்களை வழங்கவும் ஏதுவாக, தனியர் பொருட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவுகள் 15 மற்றும் 28(2) ஆகியவற்றை இச்சட்டத்தின் பிரிவு 58-இல்

வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி தனியர் பொருட்டு ஆளுநர் தளர்வு செய்கிறார்.

3. அதனடிப்படையில் திருமதி.கா.உமா அவர்களின் பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில்,நீர்வளத்துறையில், கருணை அடிப்படையில், இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்ட நாளான 30.08.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணி வரன்முறை செய்வதால் தனியர் ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அ.சா.எண்.17148/ட்டி.1/2022, நாள் 21.10.2022இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தீப் சக்சேனா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர்,
நீர்வளத்துறை, மதுரை மண்டலம், மதுரை-2.
திருமதி.கா.உமா, இளநிலை உதவியாளர்,
(தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை,
மதுரை மண்டலம், மதுரைவழியாக)
<u>நகல்</u>
முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),
நீர்வளத்துறை, சென்னை-5.
மாநில கணக்காயர்,சென்னை -18.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை- 9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (நீர்வளம்) அவர்களின் சிறப்பு
நேர்முக உதவியாளர், சென்னை – 9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

4/11/22
பிரிவு அலுவலர்
4.11.22